யீடு எண். 16

உ
திருச்சிற்றம்பலம்

முருக வணக்கம்

(108 போற்றிகள்)



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை, :: சென்னை-18.

மாநிலக்குழு உறுப்பினர்கள்

திருவருள் திரு.

,, அம்பலவாண தேசிகபரமாச்சாரிய சுவாமிகள்,
திருவாவடுதுறை ஆதீனம்-திருவாவடுதுறை.

,, கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய
சுவாமிகள், தருமையாதீனம்-தருமபுரம்—மாயூரம்.

,, ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள், காமகோடிபீடம்,
காஞ்சிபுரம்.

,, ஜீயர்சுவாமிகள்-திருக்குருங்குடி மடம்.

,, காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்சுவாமிகள்
திருப்பனந்தாள்.

,, சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய
சுவாமிகள், திருஞானசம்பந்தர் மடம்-மதுரை.

,, ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,
ஞானப்பிரகாச சுவாமிகள் மடம், காஞ்சிபுரம்.

,, இராமனுஜசுவாமிகள், ஈசான்ய மடம்-திருவண்ணாமலை.

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

தமிழ்க்கடல் ராய சொ. அவர்கள் சிவ வழிபாட்டில் தோய்ந்த நெஞ்சினர். அவர்தம் சொல்லாற்றல், தமிழக மக்கள் யாவரும் நன்குணர்ந்ததே! ஒரு சிறந்த தமிழ்ப் பெருமகன், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் வெளியிடப்படும் தமிழ் அருச்சனை நூல்களாகிய, "சிவ வணக்கம், திருமால் வணக்கம், விநாயக வணக்கம், அம்பிகை வணக்கம் ஆகிய நூல்களை வழங்கியதோடு முருக வணக்கத்தையும் வழங்கியிருக்கிறார்கள்.

108 போற்றிகள் அமையுமாறு முருக வணக்கத்தைத் திருத்தாண்டக முறையில் அமைத்திருப்பது பாராட்டுதற் குரியது. முதல் பாடலிலேயே, திருப்பரங்குன்றம், திருச்

செந்தூர், பழனி, திருவேரகம், திருத்தணிகை முதலான குன்றுதோருடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளும் அமையப் பாடியிருப்பது எண்ணி மகிழத்தக்கது.

"முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்ற அருணகிரிநாதர் வாக்கையும், இன்னும்பல சான்ருேர்களின் வாக்கையும் ஆங்காங்கு எடுத்தாண்டிருப்பது போற்றுதற்குரியது. மேலும் முருகப்பெருமானுடைய திருவிளையாடல்களாகக் கருதப்படும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் இணைத்துப் பாடியிருப்பது படித்து இன்புறத் தக்கது. தமிழ் மக்கள் இந்நூலை நல்ல முறையில் பயன்படுத்தி, முருகப் பெருமான் திருவருள் பெற, குன்றக்குடி உறையும் ஆறுமுகப் பெருமானின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறேம்.

சென்னை-18.
15—8—71

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்,
தலைவர், தமிழ்நாடு தெய்விகப் பேரவை.

உ

சிவமயம்

முருக வணக்கம்

திருத்தாண்டகம் (11) போற்றி 108

திருப்பரங்குன்று இனிதுறையும் செல்வா போற்றி!
திருச்செந்தூர்ச் சீரலைவாய்த் தேவா போற்றி!
திருப்பழநி மலையிருக்கும் தேவே போற்றி!
திருவேரக ச்சாமி நாதா போற்றி!
திருத்தணிகை முதல்மலைகள் திகழ்வாய் போற்றி!
தீம்பழங்கள் உதிர்சோலை சேர்வாய் போற்றி!
திருப்பொலிய உலகாளும் செம்மால் போற்றி!
செந்தமிழர் தெய்வமே போற்றி! போற்றி! 1

சொக்கேசர் பெற்றஉயர் தோன்றல் போற்றி!
தொல்உமையாள் ஈன்றெடுத்த சோதி போற்றி!
சக்கரம்கொள் மால்தங்கை தனயா போற்றி!
தத்துவங்கள் கடந்ததனிப் பொருளே போற்றி!
நக்கீரர், பழம்பாட்டை நயப்பாய் போற்றி!
நாவலர்கள் கவிக்கினிய நம்பா போற்றி!
விக்கின விநாயகனுக்கு இளையாய் போற்றி!
வேடர்குல மாப்பிள்ளாய் போற்றி! போற்றி! 2

அருணகிரி நாவில்நடம் புரிவாய் போற்றி!
அனுபூதி அலங்காரப் புகழாய் போற்றி!
கருணைபொழி பன்னிரண்டு கண்ணா போற்றி!
கார்அனைய கைஈராறு உடையாய் போற்றி!
அருள்சுரக்கும் ஆறுமுகத்து அண்ணல் போற்றி!
ஆலாலம் உண்டகண்டன் பாலா போற்றி!
வெருவுறச்சூர் தடிந்தவடி வேலா போற்றி!
மெய்ஞ்ஞானப் பிள்ளையே போற்றி போற்றி! 3

வள்ளியெனும் குறமகளை மணந்தாய் போற்றி!
மணப்பதற்கு மரம்போல நின்ருய் போற்றி!
கொள்ளைகொளும் எழில்அமைந்த குமரா போற்றி!
கும்பிடுவோர் இடர்களையும் குகனே போற்றி!
தெள்ளுதமிழ்ப் பெருங்கடலுள் திளைப்பாய் போற்றி!
தீந்தமிழால் வைதார்க்கும் அருள்வாய்போற்றி!
புள்ளிமயில் ஏறிவரும் புனிதா போற்றி!
புண்ணியம்செய் புண்ணியமே போற்றி! போற்றி! 4

தேவயானையைமணஞ்செய் சிங்கம் போற்றி!
தேவசேனபதியாத் திகழ்ந்தாய் போற்றி!
தேவயானைக்கிளைய சிறுவா போற்றி!
தேவேந்திரன் மருமகனும் செம்மல் போற்றி!
தேவர்சிறை மீட்டருள்செய் தீரா போற்றி!
தேவரெலாம் தொழச்சிறந்த தேவே போற்றி!
தேவாரம் பெறுசிவனர் மைந்தா போற்றி!
தேவாதி தேவனே போற்றி! போற்றி! 5

கந்தா! குகா! கடப்பந் தாராய் போற்றி!
காதலியர் இருவரையும் பிரியாய் போற்றி!
கொந்தாரும் குறிஞ்சிப்பூந் தொடையாய் போற்றி!
கோழிஎனும் கொடிகொண்ட குரிசில் போற்றி!
செந்தேறல் தினைமாவோடு உண்டாய் போற்றி!
தினைகாத்த சிறுமிமயல் சேர்ந்தாய் போற்றி!
எந்தாயே! எம் அப்பா! இறைவா போற்றி!
எழுத்தழிக்கும் இணையடிகள் போற்றி! போற்றி! 6

சரவணத்தில் வந்துதித்த தவமே போற்றி!
சரவணபவா; கார்த்தி கேயா போற்றி!
முருகனெனும் அழகுஇளமை முதலே போற்றி!
முனிவர்களும் வணங்குகின்ற மூர்த்தி போற்றி!
திருகுகுணத்து அசுரர்விழச் செற்ருய் போற்றி!
தேவர்மறைத் தீவளர்த்த சீரோய் போற்றி!
உருகுமனத்து அடியர்உளத்து உறைவாய் போற்றி!
உறுகிரிகள் உறைபவனே போற்றி போற்றி! 7

மாம்பழத்துக்கு உலகைவலம் வந்தாய் போற்றி!
    மயில்ஏறிக் கணப்பொழுதில் அடைந்தாய் போற்றி!
தீம்பழத்தை அண்ணன்உணக் கண்டாய் போற்றி!
    தே,முதல்வன் செய்சூழ்ச்சி அறிந்தாய் போற்றி!
தேம்பதுமப் பிரமன்அஞ்சச் செய்தாய் போற்றி!
    சிறையிட்டுப் பொருள்கூறும் செவ்வாய் போற்றி!
காம்பறிதோள் கயற்கண்ணி கண்ணே போற்றி!
    கட்டழகுக் கடவுளே! போற்றி! போற்றி! 8

உலகீன்ற ஒருகன்னி மகனே போற்றி!
    ஊழிமுதல் சிவன்தந்த ஒருவ போற்றி!
பலகலையும் உணர்அறிவுப் பழமே போற்றி!
    பன்னிரண்டு கண், கைகள் படைத்தாய் போற்றி!
மலர்ஆறு முகம்கொண்ட வள்ளால் போற்றி!
    வள்ளி மலர்அடி வணங்கும் மணாளா போற்றி!
மலைபிளக்க வேல்எறிந்த மன்னா போற்றி!
    மயில்ஏறும் பெருமானே போற்றி! போற்றி 9

கடல்வற்ற வேல்விட்ட கடம்பா போற்றி!
கார்அவுணக் கடல்குடித்த காளாய் போற்றி!
குடல்சரியச் சூரன்உரம் குடைந்தாய் போற்றி!
குன்றமெலாம் குடிகொண்ட குழவி, போற்றி!
மடவர்மார் வயிற்றில்தீ வைத்தாய் போற்றி!
மறைவகுத்த மகத்தீயை வளர்த்தாய் போற்றி!
படஅரவில் துயில்மாயோன் மருகா போற்றி!
பாம்பணிந்த பரன்மகனே போற்றி! போற்றி!
மருவினிய மலர்ப்பாதம் போற்றி! போற்றி!
மாவீரச் சிலம்புக்கால் போற்றி! போற்றி!
பொருவரிய பொன்னின்இடை போற்றி! போற்றி!
போர்வல்ல, வரைமார்பம் போற்றி! போற்றி!
தருகொடைக்கை பன்னிரண்டும் போற்றி! போற்றி!
தாயெனும்சீர் முகம் போற்றி! போற்றி! போற்றி!
அரன்மகிழ மறைபுகல்வாய் போற்றி! போற்றி!
அருட்கண்கள் போற்றியோ! போற்றி! போற்றி!

,, சிவஞானபாலயசுவாமிகள், பொம்மபுரம் ஆதீனம்-மயிலம்.

,, சாந்தலிங்கராமசாமி அடிகள், சாந்தலிங்க சுவாமிகள் மடம், பேரூர், கோவை-10.

,, சுந்தர சுவாமிகள், சிரவணபுரம்-கௌமார மடம், கோவை-6.

தலைவர் :

,, தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீனம்-குன்றக்குடி.

துணைத்தலைவர்:

திரு கே. எஸ். நரசிம்மன், பி.ஏ.பி.எல்.,ஐ.ஏ.எஸ்., (ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.)

செயலாளர் :

,, அ. நாராயணசுவாமி, பி.ஏ. (ஆணையரின் இணைநேர்முக உதவியாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.)

மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதி செயும் நாயன்மார் தூயசொல் மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே

—சேக்கிழார் சுவாமிகள்.

தி. பி. 2002 ஆவணி (1971) 10,000 பிரதிகள்.

பார்க்கர் அச்சகம், சென்னை-1.